| | | |
|---|---|---|
| **வேதாரண்யம் நகராட்சியின் 2024-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ம் தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**<br>**முன்னிலை திரு மா.மீ.புகழேந்தி,** | | |
| | <u>நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டத் இரங்கல் தீர்மானம்</u><br>இந்திய திருநாட்டின் முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் 26.12.2024 அன்று இயற்கை எய்தியதை முன்னிட்டு நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இரங்கல் தீர்மானம் | **தீர்மான எண்.193 : அன்னாரது மறைவுக்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது** |
| பொருள் எண்.1 | வேதாரண்யம் நகராட்சி ஆணையர் அவர்களின் அலுவலக பயன்பாட்டு பொலிரோ ஈப்பு வாகனம் எண் – **TN 51AQ 1924** –ன் வாகன காப்பீட்டினை புதுப்பிக்க **(Renewal)** வேண்டியுள்ளதால் அதற்கான காப்பீட்டுத் தொகை ரூ. **18423/–** ஆகும். மேற்படி செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : 1) மேற்காணும் செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .<br>2) அரசு அங்கீகரிக்க பெற்ற நிறுவனமான M/S THE NEW INDIA ASSURANCE CO–LTD– நிறுவனத்திற்கு தொகை செலுத்திய அலுவலக நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம் .<br>**ந.க.எண்.2097/2024/இ1** | **தீர்மான எண்.194 : அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.2 | வேதாரண்யம் நகராட்சி பொறியாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டு பொலிரோ ஈப்பு வாகனம் எண் – **TN 51AH 8239** –ன் வாகன காப்பீட்டினை புதுப்பிக்க **(Renewal)** வேண்டியுள்ளதால் , அதற்கான காப்பீட்டு கட்டணத் தொகை ரூ. **12092/–** ஆகும். மேற்படி செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : 1) மேற்காணும் செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .<br>2) அரசு அங்கீகரிக்க பெற்ற நிறுவனமான M/S THE NEW INDIA ASSURANCE CO–LTD– நிறுவனத்திற்கு தொகை செலுத்திய அலுவலக நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம் .<br>**ந.க.எண்.2096/2024/இ1** | **தீர்மான எண்.195 : அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.3 | வேதாரண்யம் நகராட்சியில் பொது நிதி –2024–2025 ன் கீழ் , கீழ்கண்ட பணிக்கு 25.11.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில், தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் , ஒப்புதலுக்கும் . | **தீர்மான எண்.196 : அங்கீகரிக்கப்பட்டது** |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ . லட்சத்தில்) | ஒப்பந்தகாரர் பெயர் | விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | நகர்பகுதியில் வடகிழக்கு பருவ மழை காலங்களில் வாடகை அடிப்படையில் JCB இயந்திரம் , Oil Engine மணல் சாக்கு மூட்டைகள் , தடுப்பு கம்புகள் , சிமெண்ட் குழாய்கள் மற்றும் தளவாட பொருட்களை வழங்குதல் மற்றும் இதரப்பணி. | 6.80 | திரு.டி.செங்குட்டுவன், ஒப்பந்ததாரர், வேதாரண்யம். | 0.38 % குறைவு |
| | | | திரு. த.காளிமுத்து ஒப்பந்ததாரர், வேதாரண்யம் | 1.15% அதிகம் |

அலுவலக குறிப்பு :

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்த விகிதம் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்

2) இப்பணியின் அவசரம் , அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.2597/2024/இ1**

| | | |
|---|---|---|
| பொருள் எண்.4 | வேதாரண்யம் நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் பணிகள் மற்றும் பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் **JCB** வாகனம் எண் – **TN51AU 0038** –ன் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.**15000/-** ஆகும் . மேற்படி செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :<br>1) மன்றம் அனுமதிக்கலாம் .<br>2) JCB நிறுவனத்தின் அங்கீகரிக்க பெற்ற நிறுவனமான M/S DYNATECH PVT LTD , THIRUVARUR – நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளும் அலுவலக நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம் .<br><br>**ந.க.எண்.2895/2024/இ1** | **தீர்மான எண்.197 : அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.5 | வேதாரண்யம் நகராட்சி வார்டு எண்-16ல் உள்ள பயத்தவரன்காடு பகுதியில் உள்ள பக்தர்குளம் நீர் நிலை மேம்பாடு செய்யும் பணி KNMT 2024-2025 திட்டதின் கிழ் மேற்கோள்ள உள்ள நிலையில் பணி | **தீர்மான எண்.198 : அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | தொடர்பாக களஆய்வு செய்ததில் நகர்மன்றத் தலைவர், ஆணையர், பொறியாளர் மற்றும் அப்பகுதி பொதுமக்களின் கோரிக்கையின்படி எதிர்வரும் மழைக்காலங்களில் குளத்தை ஒட்டிய சாலையில் மண்சரிவு ஏற்படாமல் இருக்க குளத்தின் கிழக்கு மற்றும் தெற்கு கரையில் சாலையின் ஓரமாக தாங்கு சுவர் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. மேற்படி, தாங்கு சுவர் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை **ரூ. 16.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: **1.**மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>**2.**இப்பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண்.608/2024/இ1** | |
| பொருள் எண்.6 | வேதாரண்யம் நகராட்சி எலைக்குட்பட்ட சுனாமி நகர் பூங்கா KNMT 2023-2024 திட்டத்தில் பணி நடைபெற்று நிறைவடையும் நிலையில், நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கையின்படி பூங்காவின் EB Service மற்றும் குடிநீர் வசதிக்காக போர் அமைத்து மின் மோட்டார் பொறுத்துதல் , மின் மோட்டார் அறை அமைத்தல் , கூடுதல் இருக்கைகள் அமைத்தல், தண்ணீர் வசதி செய்தல் ஆகிய பணிகள் கூடுதலாக செய்ய வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்கான அளவீடுகளின் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக உள்ளதால் கூடுதல் பணி செய்ய ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 4.30 இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : 1) மேற்காணும் செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .<br>**ந.க.எண். 2962/2024/இ1** | **தீர்மான எண்.199 : அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.7 | வேதாரண்யம் நகராட்சி எலைக்குட்பட்ட பெரியார் நகர் பூங்கா KNMT 2023-2024 திட்டத்தில் பணி நடைபெற்று நிறைவடையும் நிலையில், நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கையின்படி பூங்காவின் EB Service மற்றும் போர் அமைத்து மின் மோட்டார் பொறுத்துதல் , மின் மோட்டார் அறை அமைத்தல் , இருக்கைகள் , தண்ணீர் வசதி செய்தல் ஆகிய பணிகள் கூடுதலாக செய்ய வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்கான அளவீடுகளின் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக உள்ளதால் கூடுதல் பணி செய்ய ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 1.00 இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் . | **தீர்மான எண்.200 : அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>பொருள் எண்.8</td>
<td>வேதாரண்யம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15ல் உள்ள அகத்தியர்குளம் KNMT 2023-2024 திட்டத்தில் பணி நடைபெற்று நிறைவடையும் நிலையில் உள்ளது. இந்தக்குளம் அகத்தியர் கோவில் அருகாமையில் உள்ளது. பொதுமக்கள் அதிகம் வருகின்றனர். இதனால் இந்தக்குளத்தின் பயன்பாடு அதிகம் உள்ளது நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கோரியதின் பேரில், மேற்கண்ட பணிகளில் பொது மக்கள் அமருவதற்கு இருக்கைகள் EB Service மற்றும் தண்ணீர் வசதி ஆகிய பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ. 1.30 இலட்சம் ஆகும்.. மேற்படி செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் .<br>ந.க.எண். 2960 /2024/இ1</td>
<td>தீர்மான எண்.201 : அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.9</td>
<td>வேதாரண்யம் நகராட்சியில் தெருவிளக்குகள் பராமரிப்பு செய்யும் பணி சபரி எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணி செய்யப்பட்டுவருகிறது. அந்நிறுவனத்தின் மூலம் தற்போது பராமரிக்கப்படும் தெருவிளக்குகள் விபரம்
<table>
<tr><th>வ.எண்</th><th>விபரம்</th><th>எண்ணிக்கை</th></tr>
<tr><td>1</td><td>20W LED விளக்குகள்</td><td>2730 Nos</td></tr>
<tr><td>2</td><td>40W LED விளக்குகள்</td><td>45 Nos</td></tr>
<tr><td>3</td><td>60W LED விளக்குகள்</td><td>22 Nos</td></tr>
<tr><td>4</td><td>90W LED விளக்குகள்</td><td>28 Nos</td></tr>
<tr><td>5</td><td>200W LED விளக்குகள்</td><td>24 Nos</td></tr>
<tr><td>6</td><td>புதிய 20W LED விளக்குகள்</td><td>521 Nos</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td>3370</td></tr>
</table>
தற்போது 15 வது நிதிக்குழு மானியம் 2021-2022 திட்டத்தின் கீழ் 20W LED விளக்குகள் 521 எண்ணிக்கை அமைக்கும் பணி நடைபெற்று பணிமுடிக்கப்பட்டுள்ளது. புதியதாக அமைக்கப்பட்டுள்ள 521 விளக்குகளை பராமரிப்பு செய்ய, ஏற்கனவே பராமரிப்பு பணி செய்யும் சபரி எலக்ட்ரிக்கல் நிறுவனத்திற்கு, அவர்களின் பழைய ஒப்பந்த விலை விகிதத்திலேயே பராமரிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் அதற்காகும் செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம் .<br>2. 15 வது நிதிக்குழு மானியம் 2021-2022 திட்டத்தின் கீழ் 20W LED விளக்குகள் புதியதாக அமைக்கப்பட்ட 521 புதிய தெருவிளக்குகளை சபரி எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 2963 /2024/இ1</td>
<td>தீர்மான எண்.202 : அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

**பொருள் எண்.10**

வேதாரண்யம் நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 21 முடிய உள்ள அனைத்து வார்டுகளிலும் சேகரிக்கப்படும் மறுசுழற்சிக்குரிய பிளாஸ்டிக் கழிவுகள் நகராட்சி நுண்ணிய உரக்கிடங்கில் மிகுந்த அளவில் தேங்கியுள்ளதால் அவற்றை வாடகை வாகனங்களின் மூலம் அரியலூர் செட்டிநாடு சிமெண்ட் தொழிற்சாலைக்கு கொண்டு சென்று ஒப்படைக்கும்பணி மேற்கொள்ள மன்றம் தனது சாதாரணக்கூட்ட தீர்மானம் எண்.116/நாள்.30.08.2024-ன்படி அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து 05.12.2024 அன்று உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட 3 நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எ. | உள்ளுர் நிறுவனத்தின் பெயர் | நடை ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|
| 1. | அம்மன் டிரான்ஸ்போர்ட், வேதாரண்யம் | 18,900/- |
| 2. | No.1 டிரான்ஸ்போர்ட், டி.டி.பி. ரோடு, வேதாரண்யம் | 18,800/- |
| 3 | இனியவன் லாரி சர்வீஸ், வேதாரண்யம் | 19,200/- |

மேற்கண்ட 3 நிறுவனங்களில் “No.1 டிரான்ஸ்போர்ட், டி.டி.பி. ரோடு, வேதாரண்யம்” நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்று நகர்மன்றத்தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து, அந்நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேலும் பொதுசுகாதார பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து “No.1 டிரான்ஸ்போர்ட், டி.டி.பி. ரோடு, வேதாரண்யம்” நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1092/2012 எச்.1)

**தீர்மான எண்.203 : அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.11**

வேதாரண்யம் நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவிற்கு கீழ்குறிப்பிட்ட படிவங்கள் தேவைப்படுவதால் அவற்றை வாங்கிட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

| S.No | Description | Qty |
|---|---|---|
| 1 | இறப்பு காரணத்திற்கான மருத்துவ சான்று அறிக்கை (படிவம்-4அ) | 1000 எண்ணிக்கை |
| 2 | இறப்பு தகவல் அறிக்கை (படிவம்-2) (இளம் மஞ்சள் கலர்) | 1000 எண்ணிக்கை |
| 3 | இறப்பு சான்று வழங்கல் பதிவேடு | 4 எண்ணிக்கை |
| 4 | பிறப்பு சான்று வழங்கல் பதிவேடு | 4 எண்ணிக்கை |

மேற்கண்ட படிவங்களை தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி நிறுவனத்திடமிருந்து அச்சடித்து வாங்கிடவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.25,000/-ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பொதுசுகாதாரப்பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து மேற்கண்ட நிறுவனத்திற்கு சப்ளை உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கையினை மன்றம் அனுமதி அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2880/2024 எச்.1)

**தீர்மான எண்.204 : அனுமதிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| பொருள் எண்.12 | வேதாரண்யம் நகராட்சி பகுதியிலுள்ள 21 வார்டுகளிலும் மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகார அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறை கையேட்டில் குறிப்பிட்டுள்ளவாறு இந்நகராட்சியினை தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சி (ODF++Open Defecation Free++) பெற சுய உறுதிமொழி சான்றிதழ் (Self Declaration) மற்றும் Garbage Free City 3 Star rating அங்கீகாரம் பெறுவதற்கு பொதுமக்களிடமிருந்து இப்பொருள் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் இருப்பின் வேதாரண்யம் நகராட்சி ஆணையர் அவர்களிடம் எழுத்து வாயிலாக அறிவித்திடக்கோரும் அறிவிப்பு TRINITY MIRROR நாளிதழில் 06.11.2024 அன்று மதுரை பதிப்பில் மிகச்சிறிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு விளம்பரக்கட்டணமாக ரூ.15,120/-ஐ வழங்கிடக்கோரி "Advertisement Manager, TRINITY PRINTERS AND PUBLISHERS PRIVATE LIMITED, CHENNAI" நிறுவனத்திடமிருந்து பில்பட்டியல் (Bill No.MDUTAB242500505/Dated:06.11.2024) வரப்பெற்றுள்ளது. அதன்படி தொகை ரூ.15,120/-ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1021/2022 எச்.1) | **தீர்மான எண்.205 : அனுமதி வழங்கப்பட்டது** |
| பொருள் எண்.13 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களது கடித ந.க.எண்.22/2022/இ3 நாள்.20.11.2024-ன்படி, முனைவர் திருநங்கை வி.என். ராணி அவர்களின் சிவசக்தி கிராமிய கலைக்குழுவின் மூலம் "குடிநீர் சிக்கனம், மழைநீர் சேகரிப்பு, மரம் வளர்ப்பு, நகராட்சி பகுதியில் குப்பை என்பொறுப்பு, மக்கும் குப்பை, மக்காத குப்பை, பிளாஸ்டிக் ஒழிப்பு, வீட்டுக்கொரு கழிவறை, மஞ்சள்பையை கையில் எடுப்போம், டெங்கு காய்ச்சல், மழைநீர் சேகரிப்பு போன்றவற்றிற்கான விழிப்புணர்வுகளை பொதுமக்கள் மத்தியில் கலை நிகழ்ச்சிகள் மூலம் நடத்திட வாய்ப்பு வழங்கிட கோரியுள்ளதால் வேதாரண்யம் நகராட்சியிலும் மேற்படி கிராமிய குழுவிற்கு வாய்ப்பு வழங்குமாறு அறிவுறுத்தியதை தொடர்ந்து மேற்கண்ட கிராமிய குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது.<br>அதனை தொடர்ந்து இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி 16.12.2024 அன்று இந்நகராட்சி பகுதிகளில் வார்டு எண்.17 பொன்னன்காடு பூப்பெட்டி கடைத்தெரு, வார்டு எண்.1 தோப்புத்துறை ஆறுமுகச்சந்திப்பு மற்றும் வார்டு எண்.10 பேருந்து நிலையம் ஆகிய மூன்று இடங்களில் மேற்கண்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்ட வகையில் மேற்படி கிராமிய குழு உரிமையாளர் முனைவர் திருநங்கை வி.என். ராணி நிகழ்ச்சி ஒன்றிற்கு ரூ.5000/- வீதம் மூன்று நிகழ்ச்சிக்கு ரூ.15000/- வழங்கிட கோரியுள்ளார். எனவே இத்தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2670/2024 எச்.1) | **தீர்மான எண்.206 : அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.14 | வேதாரண்யம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் பொதுசுகாதார வாகனங்கள் மற்றும் கழிவுநீர் வாகனங்களில் ஜனவரி-2025 முதல் மார்ச்-2025 முடிய உள்ள வாகனங்களுக்கு மட்டும் காப்பீடு செலவினங்கள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. அச்செலவினங்களை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சம் ஆகும். இத்தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2933/2024 எச்.1) | **தீர்மான எண்.207 : அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>பொருள் எண்.15</td><td>வேதாரண்யம் நகராட்சியில் பொதுநிதி 2024-2025-ன்கீழ், கீழ்கண்ட பணிக்கு 25.11.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில், தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.
<table>
<tr><th>வ.எ.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)</th><th>விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு JCB இயந்திரம், பொக்லைன் இயந்திரம், ஜெனரேட்டர், டீசல் பம்பு செட்டுகள் தேவைக்கேற்ப வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல்</td><td rowspan="2">6.00</td><td>டி. செங்குட்டுவன், ஆயக்காரன்புலம்</td><td>1.00% அதிகம்</td></tr>
<tr><td>த. காளிமுத்து, கைலவனம்பேட்டை, வேதாரண்யம்</td><td>0.50% குறைவு</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:<br>1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்த விகிதம் வழங்கியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2. இப்பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.2506/2024 எச்.1)</td><td>தீர்மான எண்.208 : அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண்.16</td><td>வேதாரண்யம் நகராட்சியில் பொது நிதி - 2024-25ன் கீழ், கீழ்கண்ட பணிக்கு 30.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின பெயர்</th><th>மதிப்பீடு (ரு லட்சத்தில்)</th><th>ஒப்ப்நததாரர்களின் பெயர்</th><th>விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">வேதாரண்யம் நகராட்சி வார்டு எண்-16, பக்தர்குளத்தின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதியில் தாங்கு சுவர் அமைக்கும் பணி.</td><td rowspan="2">16.00</td><td>M/s ஜீவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நாககுடையான்.</td><td>0.06% குறைவு</td></tr>
<tr><td>M/s ஆகாஷ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், பஞ்சநதிக்குளம்.</td><td>0.51% அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:<br>1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்த விகிதம் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்.<br>2. இப்பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க. எண். 608/2024/இ1)</td><td>தீர்மான எண்.209: அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

**ஒம்/–**

**மா.மீ.புகழேந்தி**

**நகர்மன்றத் தலைவர்**